சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர், சேலம் வடக்கு தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க., த.வெ.க கட்சிகளைச் சேர்ந்த 2100 பேர் அக்கட்சிகளை விட்டு விலகி தி.மு.க.வில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் இணைந்தவர்களுக்கு அமைச்சர் ஏ.வ.வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார். இதில் மாவட்ட கழக பொருளாளர் மு.கார்த்திகேயன், ஓமலூர் தொகுதி பார்வையாளர் ஈ.ஜி.சுகவனம், ஒன்றிய கழக செயலாளர்கள் ஓ.எம். ரமேஷ், செல்வ குமரன், ராஜ அய்யப்பன், பாலசுப்பிரமணி, கே.சி.அறிவழகன், கே.சி.ரவிச்சந்திரன், பேரூர் கழக செயலாளர் ரவிச்சந்திரன், லோகநாதன், பிரபாகரன், தளபதி நற்பணி மன்ற தலைவர் மகேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அரியலூரில் HPV தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடக்கம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜன. 29 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நந்தம் பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக மகளிர் உச்சி மாநாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 14 வயது பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி செலுத்தும் திட்டத்தினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்த நிகழ்ச்சியின் நேரலை அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்வில் தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டார். அதனைத்தொடர்ந்து மாணவிகளுக்கான HPV (Human Papilloma Virus) தடுப்பூசியினை மருத்துவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நந்தம் பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக மகளிர் உச்சி மாநாட்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 2025 - 2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி அரியலூர் மாவட்டத்தில் இன்றையதினம் HPV தடுப்பூசி வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். தடுப்பூசி திட்டத்தின் கீழ் 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பை வாய்ப் புற்றுநோய் புதியதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்று நோய்களில் மார்பக புற்றுநோய்க்கு (28.7%) அடுத்தபடியாக கருப்பைவாய் புற்றுநோய் (14%) கண்டறி யப்பட்டுள்ளது. இந்த ஆய்வு மாவட்ட வாரியாக மேற்கொள்ளப் பட்டதில் அதிக நோய் நிகழ்வு விகிதம் கொண்ட முதல் நான்கு மாவட்டங்களில் அரியலூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் தற்போது முன்னோடி திட்டம் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஹெச்.பி.வி. வைரஸ் தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பை வாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் 99.7 சதவீதம் தடுக்க இயலும். அதன்படி கார்டாசில் (Gardasil) தடுப்பூசி 0.5 அட அளவில், தசை வழி இடது மேல் கையில் (Intramuscular Left Upper Arm) செலுத்தப்படும். தமிழ்நாட்டில் கருப்பை வாய் புற்று நோயை தடுக்க 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு அரியலூர் உட்பட நான்கு மாவட்டங்களில் ஹெச்.பி.வி தடுப்பூசி வழங்கும் முன்னோடி திட்டம் உலக மகளிர் உச்சி மாநாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மருத்துவர்களிடம் ஹெச்.பி.வி தடுப்பூசியினை வழங்கினார்.

மேலும் ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்திக் கொண்ட மாணவிகளுக்கு ஹெச்.பி.வி தடுப்பூசி சான்றிதழ்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 14 வயதுடைய 4,190 பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி அனைத்து பெற்றோர்கள், பாதுகாவலர்கள், பள்ளி அதிகாரிகள் ஆகியோர் சுகாதார களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி முகாமின் போது தகுதியுள்ள அனைத்து குழந்தைகளும் சர்வதேச தரத்தினை கொண்ட ஹெச்.பி.வி (HPV) தடுப்பூசி பெறுவதை உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஹெச்.பி.வி தடுப்பசி திட்டம் குறித்து அரசுப் பள்ளி மாணவி வைஷ்ணவி என்பவர் தெரிவிக்கையில், நான் அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். இன்று எங்களது பள்ளியில் நடைபெற்ற ஹெச்.பி.வி தடுப்பூசி வழங்கும் தொடக்க நிகழ்ச்சியில் கருப்பை வாய் புற்றுநோய் குறித்தும், ஹெச்.பி.வி தடுப்பூசி திட்டத்தின் குறிப்புகள் குறித்தும் எங்களுக்கு மருத்துவத் துறையினர் தெளிவாக எடுத்துரைத்தனர். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்று எங்களின் உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும் பேணி பாதுகாத்திடும் வகையில் இத்தகைய சிறப்பான திட்டங்களை வழங்கியுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாணவி வைஷ்ணவி என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத்தலைவர் சாந்தி கலைவாணன், இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.மாரிமுத்து, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. மணிவண்ணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகோபால், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், பள்ளி ஆசியர்கள் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மாணாக்கர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

விழுப்புரம் மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர்கள் செஞ்சி மஸ்தான் – டாக்டர் லட்சுமணன் – டாக்டர் பொன்,கௌதம சிகாமணி அறிவிப்பு!



விழுப்புரம், ஜன.29-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம். எல்.ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட திமுகஅவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் மண்டல பொறுப்பாளர், உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம்.எல். ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணிஆகியோர் முன்னிலையில் இன்று (29.01.2026 வியாழக்கிழமை) காலை 11.00 அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள்,பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி,நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

பொருள்:

1. 01.02.2026 அன்று விழுப்புரம் மண்டலத்திற்கு வருகை தரவுள்ள “தேர்தல் அறிக்கை குழுவினர்” கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பாக.
2. 04.02.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைதரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக.
3. 11.02.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் மண்டல வாக்குச்சாவடி நிர்வாகிகள்மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக.
4. கழக ஆக்கப் பணிகள்.

கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.	டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ.	டாக்டர் பொன். கௌதம சிகாமணி
பொறுப்பாளர் ,	பொறுப்பாளர் ,	பொறுப்பாளர் ,
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.	விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க.	விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜன.29 -

பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழக துணை பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி,

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, பெரம்பலூர் மாவட்ட கழக அவசரா செயற்குழு கூட்டம், இன்று (29.01.2026 - வியாழக் கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு,கிளை கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

பொருள் :

1 மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து.

2 கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

துறைமுகம் தொகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜன.28-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 342 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (27.01.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: 56வது வட்டம் பிடாரியார் கோயில் தெரு சைவ முத்தையா திருசந்திப்பு, 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59, ரட்டன் பஜார், சென்னை3. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இரா. வெற்றிகொண்டான்

சனவரி 29 (2011)

பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – “பொழுது விடியும்” எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – ‘கண்ணியம்’எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; “இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு –அவர்தம் தம்பியராம் எங்களோடு!”.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மும்பை த.மு. ஆரியசங்காரன்

சனவரி 29 (2016)

சிறுவயது முதல் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இரத்தினவேல் என்கின்ற இவர், 1942ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு மேடையில், தனது 16ஆவது வயதில் பேசியபோது, தந்தை பெரியார் அவர்களால் ‘ஆரிய சங்காரன்’ என்று பெயரிடப்பட்டவர்.

1948ஆம் ஆண்டில் மும்பைக்கு குடிபெயர்ந்த இவர், 1951ஆம் ஆண்டு தி.மு.கழகத்தில் இணைந்து, தாராவி கிளைக் கழகச் செயலாளர், மும்பை தி.மு.க. செயலாளர், பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்

மராட்டிய மாநில ஆட்சியாளர்களிடம் கழகத்தின் சார்பில் நல்லுறவு கொண்டு மும்பைவாழ் தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் செய்து, மும்பை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

2013ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் ‘‘பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.